இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro.No.EPL1/2025 | 15-04-2025

# மேய்ப்பு மடல்

கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ இருபால் துறவிகளே/ இறைமக்களே,

## உயிர்ப்பு - எதிர்நோக்கின் அடித்தளம்

உயிர்த்த ஆண்டவர் தரும் நிலையான மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் அனைவருக்கும் நிறைவாக கிடைப்பதாக! அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்கள்.

கடவுள் மனிதராகி 2025 ஆண்டுகள் கடந்து சென்றுவிட்டன. அகில உலக திருச்சபை யூபிலி விழா கொண்டாடி மகிழ்கிறது. எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற மையசிந்தனையைத் தந்து நாம் எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்று திருச்சபை நமக்கு நினைவூட்டுகிறது. உயிர்த்த ஆண்டவர் எதிர்நோக்கைத் தந்து நம்மோடு வாழ்கிறார். பழைய இஸ்ராயேல் மக்கள் தங்கள் வாழ்வில் 'கடவுள் நம்மோடு' என்ற உணர்வை சுமந்து பயணம் செய்தனர். புதிய இஸ்ராயேல் மக்களாகிய நாம் கடவுளின் திருமகனாகிய இயேசு தரும் எதிர்நோக்கில் பயணிக்க வேண்டும். உயிர்த்த ஆண்டவர் உடன் பயணிக்கின்றவர். தூதர்கள் அறிவித்த உயிர்ப்பின் செய்தி பெண்கள் மத்தியில் அச்சமும் அகமகிழ்வும் தந்தது. "அவர்களும்

கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத் 28:8). இந்த இரண்டு உணர்வுகளும் ஒரு போதும் இணைந்து செல்வதில்லை. அச்சமிருக்கும் இடத்தில் மகிழ்ச்சி இருப்பதில்லை. மகிழ்ச்சி இருக்கும் இடத்தில் அச்சம் இருப்பதில்லை. ஆனால் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்குமிடையே அந்த பெண்களின் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடைபெறுகிறது. அவநம்பிக்கை அச்சத்தையும் நம்பிக்கை மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. சீடத்துவ வாழ்வில் இது வெளிப்படையாக அனுபவமாகிறது.

**உயிர்ப்பில் உதயமாகும் எதிர்நோக்கு**

பாடுகளும் சிலுவை மரணமும் அனைவரையும் எதிர்நோக்கு இழந்த நிலைக்கு தள்ளிவிட்டது. ஆனால் உயிர்ப்பு சீடர்களில் எதிர்நோக்கின் புது எழுச்சியைக் கொடுத்தது. வெற்றுக்கல்லறையும், உயிர்த்த ஆண்டவரின் திருக்காட்சிகளும் உயிர்ப்பென்னும் உண்மையை உரக்கச் சொல்கின்றன. கடவுளின் திருமகனாகிய இயேசு சிலுவை மரணம் ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிதல் உள்ளவரானார். ஆனால் கடவுள் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் (பிலி 2:8-9). கிறிஸ்துவின் உயிர்ப்பில் மீட்பின் மறையுண்மைகள் நிறைவு காண்கின்றன. "நம் குற்றங்களுக்காகச் சாகுமாறு கடவுள் இயேசுவை ஒப்புவித்தார்; நம்மைத் தமக்கு ஏற்புடையவர்களாக்குமாறு அவரை உயிர்த்தெழச்செய்தார்" (உரோ 4:25). அச்சமுற்றிருந்த சீடர்களுக்கு ஆண்டவர் காட்சி கொடுத்த போது அவர்கள் அச்சம் நீங்கி எதிர்நோக்குள்ளவர்களாகவும் அகமகிழ்வுடையவர்களாகவும் மாறினார்கள். உயிர்த்த ஆண்டவரைக் கண்ட சீடர்கள் மகிழ்ச்சி பொங்க நற்செய்திப் பணிக்கு தங்களை அர்ப்பணித்தனர் (யோவா 19:20-23). நமது வாழ்க்கைப் பயணத்தை தளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் எல்லா தீய சூழல்களையும், வன்முறை எண்ணங்களையும், நேர்மையற்ற செயல்பாடுகளையும், நெறி தவறிய முறைகளையும், உயிர்த்த ஆண்டவரின் திருமுன் வைத்து எதிர்நோக்கை உள்வாங்குவோம். அவ்வாறெனில் எதிர்நோக்கை உலகிற்கு வழங்க நமக்கு இயலும்.

சுருங்கக் கூறின் எதிர்நோக்கு நம்மை கடவுளின் வாக்குறுதிகளிலுள்ள நம்பிக்கைக்கும், இறைமக்களிடமும் அழைத்துச் செல்லும். கண்கள் மங்கி முகவாட்டத்தோடு காணப்பட்ட எம்மாவூ சீடர்களும் உயிர்த்த இயேசுவின் குரலைக் கேட்டு திருமுகம் தரிசித்து எதிர்நோக்கை பெற்றுக் கொண்டனர். சீடர்க்குழுவுடன் இணைந்து எதிர்நோக்குடையவர்-களாகவும் எதிர்நோக்கை அளிப்பவர்களாகவும் மாறினர். அவர்களின் உள்ளத்தில் அமைதி அனுபவமானது. உயிர்த்த ஆண்டவர் அளிக்கும் ஆசீரே உண்மையான சமாதானம். “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம்” (யோவா 14:27).

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் உயிர்ப்பு விழா திருச்சடங்குகளில் வரும் செபங்கள் ஆண்டவர் அருளும் அமைதிக்காக இறைவேண்டல் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சீடர்களின் உள்ளங்களில் உறைந்திருந்த அச்சம் அகன்று துணிவு பிறக்கின்றது. நமது நம்பிக்கை வாழ்வு மற்றும் திருவழிப்பாட்டு வாழ்வு இவற்றின் மையமாக விளங்கும் மறைபொருளே உயிர்ப்பு. மனநலச்சிதைவு கண்டு கலங்கிய உள்ளங்களில் அமைதியை விதைக்க ஆண்டவர் இயேசுவை அணுகுவோம். உயிர்த்த ஆண்டவர் தம் அருட்கரம் நீட்டி நம்மையும் அழைக்கிறார். அச்சமும் எதிர்நோக்கும் இல்லாத மனித வாழ்வு கலக்கமும் பிரச்சனைகளும் நிறைந்தது. சீடத்துவ வாழ்வில் முன்னேறும் நாம் மீண்டும் காட்டிக்கொடுக்காமலும், மீண்டும் மறுதலிக்காமலிருப்போம். இன்றைய உலகில் கடவுள் மறுப்பு கொள்கையும் விழுமியங்களின் வீழ்ச்சியும், போதையின் மீது நாட்டமும் பெருகிக் கொண்டிருக்கிறது. இளைய தலைமுறை இறைநம்பிக்கையை சந்தேகத்துடன் பார்க்கிறது. போதைகளுக்கு அடிமைப்பட்டவர்கள் வன்முறை எண்ணங்களில் வாழ்கின்றனர். இவர்கள் குடும்பங்களிலும், சமூகத்திலும் உருவாக்கும் காயங்கள் வருணிக்க முடியாதவை. கடவுளை இழந்து வாழ்பவர்களுடைய உள்ளங்களில் தீமை வேரோட்டம் எடுத்துவிட்டது. சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை பயன்படுத்தி வன்முறை செயல்களை இன்றைய சமூகம் மேலோட்டமாக பார்த்துவிடுகிறது. கடந்த காலத்தில்

பெற்றோர்களும், ஆசிரியர்களும், மத போதகர்களும், சரி எது, தவறு எது, என தெளிவுபடுத்தினர். இன்று இந்த அறிவு தெளிவு இல்லை. அறிவுத்தெளிவுடன் எதிர்நோக்கில் வாழ முயல்வோம்.

கல்வாரி கண்டு நடுங்கி ஓடியவர்கள் உயிர்ப்பால் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். உயிர்ப்பாகும் துறைமுகத்தை அடைவதற்கு சிலுவை ஒரு மார்கமாக உள்ளது. எந்நாளும் உலக முடிவுவரை நம்மோடிருக்கும் ஆண்டவர் இன்றைய உலகில் அவருக்கு சாட்சிகளாக நம்மை அழைக்கிறார். அன்பும் அமைதியுமுள்ள மனித சமூகத்தை உருவாக்க உயிர்த்த ஆண்டவர் உடனிருந்து நம்மை வழிநடத்துவாராக!

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

அன்புடன்

† மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ்
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

**NB: இந்த மேய்ப்பு மடலை நமது ஆலயங்களிலும் , மறைப்பணி தளங்களிலும் 19-04-2025 அன்று திருப்பலியின் மத்தியில் வாசிக்கவும்**